**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 83/ 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 17** |
| **Name** | : | **திரு. Dr.முகமது ரசீது** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.12.2024**

2 வது எதிரி ஆஜர். 1, 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்பொழுது மதுரை மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 05.10.2016 ம் தேதி மதுரை மருத்துவக் கல்லூரியில் பணியில் இருந்த போது, நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பேரையூர் அவர்களின் கடித எண். 1456/16, 04.10.2016 அன்று சாப்டுர் குற்ற எண். 127/2016 u/s. 366, 376, 302 of IPC வழக்கில் சம்பந்தப்பட்ட ஆண் ஈஸ்வரன், வயது 40, த/பெ. முத்துபிள்ளை 2/2, பிள்ளையார் கோவில் தெரு, மலையூர், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம் என்பவரின் ஆண்மை தன்மை கண்டறிய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஜெயராமன் மற்றும் தநாகாஎண். 1816 அன்பழகன் ஆகியோர் மூலமாக ஆஜரான மேற்படி ஈஸ்வரனை 05.10.2016 ம் தேதி முற்பகல் 11.20 மணிக்கு மருத்துவ பரிசோதனை செய்தேன். பரிசோதனை

செய்யப்பட்ட நபர் திடமான உடல் வாகுடனும், நல்ல மனநிலையிலும் காணப்பட்டார். அவருடைய முதல் மற்றும் இரண்டாம் பாலின உறுப்புகள் நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டது. அவருடைய உடலில் வெளிப்புறத்தில் மற்றும் பிறப்பு உறுப்பில் எவ்வித காயமோ அந்நியப் பொருட்களோ காணப்பட்வில்லை. இறுதிக் கருத்தாவது, அவர் ஆண்மை தன்மை யற்றவர் என்று கூறுவதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை மற்றும் உடலுறவு கொள்ள தகுதியற்றவர் என்று கூறுவதற்கு எதுவும் இல்லை. இதுவே என்னுடைய கருத்தாகும் என்று கருத்து வழங்கினேன். **நான் 2 வது எதிரிக்கு வழங்கிய சான்றிதழ் அதசாஆ.19.** நான் கடந்த 18.10.2016 ம் தேதி மதுரை மருத்துவக் கல்லூாரியில் பணியில் இருந்த போது, நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பேரையூர் அவர்களின் கடித எண். 1511/16, 17.10.2016 அன்று சாப்டுர் குற்ற எண். 127/2016 u/s. 366, 376, 302 of IPC வழக்கில் சம்பந்தப்பட்ட ஆண். கிடாச்செல்வம் என்ற பன்னீர் செல்வம், வயது 30, த/பெ. செல்லையா, பழையூர், அப்துல்கலாம் தெரு, பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம் என்பவரை ஆண்மை தன்மை கண்டறிய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஜெயராமன் மற்றும் 1816 அன்பழகன் ஆகியோர் மூலமாக ஆஜரான மேற்படி கிடாச்செல்வம் என்ற பன்னீர்செல்வத்தை 18.10.2016 ம் தேதி பிற்பகல் 12.30 மணிக்கு மருத்துவ பரிசோதனை செய்தேன். பரிசோதனை செய்யப்பட்ட நபர் திடமான உடல் வாகுடனும், நல்ல மனநிலையிலும் காணப்பட்டார். அவருடைய முதல் மற்றும் இரண்டாம் பாலின உறுப்புகள் நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டது. அவருடைய உடலில் வெளிப்புறத்தில் மற்றும் பிறப்பு உறுப்பில் எவ்வித காயமோ அந்நியப் பொருட்களோ காணப்பட்வில்லை. இறுதிக் கருத்தாவது, அவர் ஆண்மை தன்மை யற்றவர் என்று கூறுவதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை மற்றும் உடலுறவு கொள்ள தகுதியற்றவர் என்று கூறுவதற்கு எதுவும் இல்லை. இதுவே என்னுடைய கருத்தாகும் என்று கருத்து வழங்கினேன். **நான் 3 வது எதிரிக்கு வழங்கிய சான்றிதழ் அதசாஆ.20.**

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :

கிடாச்செல்வத்திற்கு 18.10.2016 ம் தேதி வழங்கிய சான்றிதழ் அதசாஆ.20 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த சான்றிதழில் கருத்துரையில் "not" என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கிடாச்செல்வத்திற்கு நான் வழங்கிய கருத்துரையின் படி அவர் உடலுறவு கொள்வதற்கு தகுதியானவர் இல்லை என்றால் சரிதான். அவருக்கு உண்மையிலேயே ஆண்மை இல்லை என்றும், போலீசாருக்கு ஆதரவாக சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை